**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – சுற்றுச்சூழல் மேம்பாடு – பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் மன்றங்களின் செயல்பாடுகளை கவனிக்க ஒரு உதவி இயக்குநர் மற்றும் 32 முதுகலை ஆசிரியர் தற்காலிக பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது – 01.01.2021 முதல் 31.12.2023 வரை மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வி [பக5(1)]துறை**

**அரசாணை (1டி) எண்.88** — **நாள் 23.06.2021**
**(திருவள்ளுவராண்டு 2052, )**
**பிலவ வருடம் ஆனி 8**

படிக்கப்பட்டவை :

1. அரசாணை (நிலை) எண்.175, பள்ளிக் கல்வித்(இ1) துறை, நாள். 20.07.2009.
2. அரசாணை(1டி)எண்.99, பள்ளிக்கல்வித்[பக5(1)]துறை, நாள் 05.03.2018,
3. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.001510/எல்/இ3/2021, நாள் 27.04.2021.

*******

ஆணை :–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கான சுற்றுச்சூழல் மன்ற செயல்பாடுகளை மேற்பார்வையிடுவதற்கும், இத்திட்டத்தினை செம்மையாகச் செயல்படுத்துவதற்கும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு முதுகலை ஆசிரியர் (தாவரவியல் / உயிரியல்) வீதம் புதியதாக 32 பணியிடங்கள் ரூ.9,300–34,800+ ரூ.4,800/– தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்திலும், மாவட்டங்களில் உள்ள செயல்பாடுகளை கவனிக்கவும் மற்றும் ஒருங்கிணைக்கவும் மாநில அளவில் உதவி இயக்குநர் என்ற நிலையில் ஒரு பணியிடம் ரூ.15,600 – 39,100 + ரூ.5,400/– தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்திலும் தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மேற்காண் பணியிடங்களான ஒரு உதவி இயக்குநர் பணியிடம் மற்றும் 32 முதுகலை ஆசிரியர் (தாவரவியல் / உயிரியல்) பணியிடங்களுக்கு கடைசியாக 01.01.2018 முதல் 31.12.2020 வரை மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்காண் அரசாணைகளின்படி, 31.12.2020 வரை தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்ட பணியிடங்களுக்கு, 01.01.2021 முதல் மேலும் மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் அரசை வேண்டியுள்ளார்.

4. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி தோற்றுவிக்கப்பட்ட ஒரு உதவி இயக்குநர் பணியிடம் (புதிய ஊதிய விகிதம் : நிலை–22, வரிசை எண்.1, ரூ.56,100 –1,77,500) மற்றும் 32 முதுகலை ஆசிரியர் (தாவரவியல் / உயரியல்) (புதிய ஊதிய விகிதம் : நிலை–18,

வரிசை எண்.1, ரூ.36,900 –1,16,600/–) பணியிடங்களுக்கு 01.01.2021 முதல் 31.12.2023 வரை மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. இப்பணியிடங்களில் பணிபுரியும் ஒரு உதவி இயக்குநர் பணியிடம் மற்றும் 32 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் (தாவரவியல் / உயிரியல்) ஒவ்வொன்றுக்கும் ஊதியம் குறித்த செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படும்:-

<u>ஒரு உதவி இயக்குநர் பணியிடம் கணக்குத் தலைப்பு</u>

2202 – பொதுக் கல்வி –02–இடைநிலைக் கல்வி – 001 – நெறிப்படுத்தலும் நிருவாகமும் – மாநிலச் செலவினங்கள் – AA – பள்ளிக் கல்வி இயக்ககம் –301 சம்பளங்கள்.
(IFHRMS 2202–02–001–AA-301 00)

<u>32 முதுகலை ஆசிரியர் பணியிடங்களுக்கான கணக்குத் தலைப்பு</u>

2202 பொதுக்கல்வி – 02 இடைநிலைக் கல்வி – 109 அரசு இடைநிலைப் பள்ளிகள் – மாநிலச் செலவினங்கள் – AA அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம் – 301 சம்பளங்கள்.
(IFHRMS 2202–02–109–AA-301 00)

6. இப்பணியிடங்களில் பணியாற்றும் பணியாளர்கள் அப்பணியிடங்களுக்குரிய ஊதிய விகிதம், அகவிலைப்படி மற்றும் இதரப் படிகளையும் பெறத் தகுதி உடையவர்களாவர்.

7. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.எண்.22223/கல்வி–II/2021, நாள் 17.06.2021ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை–6.
மாநில கணக்காயர், சென்னை–18.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் / சார் கருவூல அலுவலர்கள்,
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

<u>நகல்:-</u>
சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை, சென்னை – 9.
நிதித் (கல்வி–II) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

23/6/2021
அரசு சார்புச் செயலாளர்.

ந.க.எண் 001510/எல்/இ3/2021 நாள் 23.06.2021

(நகல்) தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

Joint Director (NSS)
Directorate of School Education
Chennai - 600 006